விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 219 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 10 சனிக்கிழமை (26.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரி

## கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் முன் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழிக்கு நீதிகோரி கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் முன் இன்று காலை 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

'மாண்புமிகு மலையக மக்கள் சிவில் கூட்டிணைவு' ஆதரவுடன் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரி வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மயிலிட்டியில் மீன் பிடிக்கச் சென்ற

## 6 பேர் கரை திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மயிலிட்டியில் இருந்து ஆழ்கடல் மீன் பிடிக்காக நான்கு நாள்களுக்கு முன்னர் 6 பேருடன் சென்ற படகு இதுவரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 6 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை

15ஆம் பக்கம் பார்க்க

### தமிழ் இன அழிப்புக்கு நீதி கோரி

# வடக்கு, கிழக்கில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் நடாத்தப்பட்டுவரும் தமிழ் இன அழிப்புக்கு நீதி கோரி வடக்குக் கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள்

## ஆரம்பம்

### பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் துப்புரவுப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் மேலும் மனிதப் புதைகுழிகள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படும் பகுதிகளில் நேற்று துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில்

## தடுப்பில் வைக்கப்பட்டிருந்தவர் தூக்கிட்டுத் தற்கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த இரத்தினம்ராயு (வயது-65) என்ற நான்கு

15ஆம் பக்கம் பார்க்க

## 90 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணியில் இதுவரை அடையாளம்

### 2 மனித எச்சங்கள் நேற்றும் இனங்காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 90 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 2 மனித எச்சங்கள் நேற்றும் இனங்காணப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 20 ஆவது நாள் அகழ்வு யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா

15ஆம் பக்கம் பார்க்க



## செம்மணி அகழ்வு, விசாரணைக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு

### பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



(ஹட்டன்)

செம்மணிப் புதைகுழி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வுப்பணிமற்றும் விசாரணைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

### புலிகளை மீளுருவாக்க முயற்சி

## கைது செய்யப்பட்ட 16 இளைஞர்கள் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட 16 தமிழ் இளைஞர்களை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

2017 முதல் 2020 வரை யாழ்ப்பாணம், பூநகரி மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ஆம் ஆண்டு மற்றும் 6ஆம் ஆண்டு

# சிரார்த்த தின அழைப்பு

கடந்த (06.08.2024) செவ்வாய்க்கிழமை அன்று சிவன் பாதம் புகுந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் மாணிக்கம் கனகசிங்கம்



மற்றும்

கடந்த (27.06.2019) வெள்ளிக்கிழமை அன்று சிவன் பாதம் புகுந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கனகசிங்கம் வசந்தாதேவி

அவர்கள் இருவரினதும் சிரார்த்த தின நிகழ்வுகள் யாவும் இன்று (26.07.2025) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும்.

இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வசந்தகம்
கரகத்தாம்புலம்
கொற்றாவத்தை

இங்ஙனம் :
குடும்பத்தினர்

(4880)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.06.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் றொபின்சன் புனிதராணி (உமா)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று வெள்ளிக் கிழமை (25.07.2025) காலை 08.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (27.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்

(4859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச கல்வி சீர்திருத்தம் அரசியல் நோக்கம் கொண்டதல்ல

## ஜனாதிபதி அநுர தெளிவூட்டல்

(கொழும்பு)

**ஒவ்வொரு பிள்ளையும் 13 வருட கட்டாயக் கல்வியை எந்த காரணத்திற்காகவும் நிறைவு செய்யாமல் பாடசாலையை விட்டு செல்லக் கூடாது. உத்தேச கல்வி சீர்திருத்தம் ஒரு அரசியல் நோக்கிலான திட்டமன்றி ஒரு சமூக நோக்கம் கொண்டது என்பதால் அதற்கு ஆதரவளிக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வி சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி சீர்திருத்தம் குறித்த கலந்துரையாடல் எழுந்த போது, வரலாறு சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா போன்ற பிரச்சினைகளைப் பற்றி ஆராயத் தொடங்கினோம். உண்மையில், இது பாடத்திட்டத்தின் திருத்தம் செய்வது தொடர்பான சீர்திருத்தம் மட்டுமல்ல.

இது நமது முழு சமூகம், பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் நமது நாட்டின் புதிய மாற்றத்திற்கான ஒரு புதிய கல்வி சீர்திருத்தமுமாகும்.

வறுமையை ஒழிப்பதற்கான திட்டமாக நோக்கினால் கல்வி அதை ஒழிப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவர் கல்வி கற்றால், முழுக் குடும்பமும் மீட்சி பெறும் என்று நம் கிராமங்களில் பொதுவாகக் கூறுவார்கள். எனவே, இந்த வறுமையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள கல்வி மிகவும் முக்கியமானது. நம் நாட்டில் குற்றம். சிறையில் உள்ளவர்களில் சுமார் 80% பேர் சாதாரண தர மட்டத்தை விடக் கீழ் மட்டத்தில் உள்ளனர்.

போதைக்கு அடிமையானவர்களில் சுமார் 70% பேர் எட்டாம் வகுப்பை விட குறைவாக கற்றவர்களாக உள்ளனர். அதன்படி, இந்த சமூகக் குற்றங்களுக்கும் போதைப்பொருள் மற்றும் கல்விக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. 13 வருட கட்டாயக் கல்வியை நிறைவு செய்யாமல் எந்தப் பிள்ளையும் பாடசாலையை விட்டு வெளியேறக் கூடாது.

நமது கல்வி குறிப்பிடத்தக்க அளவிற்கு எமது பிள்ளைகளை இயந்திரமயமாக்கியுள்ளது. இன்று, கிராமங்களில் கரப்பந்தாட்ட மைதானம் கூட இல்லை.

இயந்திரங்களைப் போல, ஈரம் இல்லாத, இரக்கம் இல்லாத, சமூகத்தின் மீதான பொறுப்பற்ற ஒரு தலைமுறை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, நவீன கல்வியை வழங்குவதற்குத் தேவையான அறிவும் அனுபவமும் நம்மிடம் உள்ளதா என்பதை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆசிரியர்களிடம் உள்ள அறிவு போதுமானதாக இல்லை. அவர்களின் அறிவு புதுப்பிக்கப்படவில்லை. பிறகு எப்படி ஒரு நவீன பிள்ளையை உருவாக்க முடியும்? அதற்கு, நமக்கு ஒரு வலுவான ஆசிரியர்கள் தலைமுறை தேவை.

எனவே, கல்வியில் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு தரமான மாற்றம் தேவை. எனவே, ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டமும் தொடங்கப்படும்.

இலங்கையின் பொருளாதார அமைப்பின் வலுவான இருப்புக்கு இந்தக் கல்வி சீர்திருத்த செயல்முறை மிகவும் முக்கியமானது. எனவே, இந்தப் பணியை மேற்கொள்வதில் அனைத்து அரசியல் குழுக்களும் கைகோர்க்க வேண்டும். கிராமத்தில் இந்தக் கல்வி முறையைத் தொடங்கும் போது, அதற்கு எதிரான குழுவில் இணையாது, நல்ல விடயங்களுடன் முன்னோக்கிச் செல்ல ஒத்துழைப்பு வழங்குங்கள் என அவர் தெரிவித்தார். (நி)

---

### நடப்பாண்டில் இதுவரை

## 36 ஆயிரம் புற்றுநோயாளர்கள் மருத்துவமனையில் அனுமதி

(கொழும்பு)

இந்த வருடத்தில் ஜனவரி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் 36,000 புற்றுநோய் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டதாக சுகாதார துணை அமைச்சர் வைத்தியர் ஹங்சக விஜேமுனி தெரிவித்தார்.

இதே காலகட்டத்தில் மருத்துவமனையில் 6,700 புதிய நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் தற்போது 3,300 வாய் புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளதாக பல் அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் பிரசன்ன ஜயசேகர தெரிவித்துள்ளார்.

புகைபிடித்தல், வெற்றிலை மெல்லுதல் மற்றும் மது அருந்துதல் போன்ற பழக்கங்களால் வாய் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே வாய் புற்றுநோய் நோய்கள் அதிகரித்து வருவதாகவும், இது கவலைக்கிடமான விடயமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (நி)




கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு 23.07.2025 பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் தமிழ் இளையோர் அமைப்பும் இணைந்து பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

---

## ஜனாதிபதி மாலைதீவு விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அதன்படி, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவின் அழைப்பின் பேரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மாலைதீவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இவ்விஜயம், இருநாட்டு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற உள்ளது.

இதன்போது, பொருளாதாரம், சுற்றுலா, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல முக்கிய துறைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஜயத்தின் முழுமையான திட்டவட்டக் கட்டமைப்புகள் விரைவில் அறிவிக்கப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

---

## உர விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் உர விலைகள் அதிகரித்து வரும் நிலையில், உள்நாட்டிலும் உர விலைகள் அதிகரித்து வருவதாக அமைச்சர் கே.டி. லால்காந்த் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான பிரச்சினையைத் தாண்டி, சலுகை விலையில் உரங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார். (நி)

---

## காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### பிரதி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என காணி, நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காதர் மஸ்தான் எம்.பி நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணி பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஏனைய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 54,000 ஏக்கர் காணி, வவுனியா மாவட்டத்தில் 24,000 ஏக்கர் காணி மற்றும் மன்னார் மாவட்டத்தில் 2000 இற்கும் மேற்பட்ட ஹெக்டெயார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வன பாதுகாப்பு திணைக்களத்தால் அதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

தற்போது அது தொடர்பில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையே நடத்தப்பட்டுள்ளது என்பதால் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக மாவட்ட ரீதியில் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என அவர் தெரிவித்தார். (நு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமடு அன்னையின் திருவிழா; முன்னாயத்த கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழாவில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் ஆவணி மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் மற்றும் மடு திருத் தலத்தின் பரிபாலகர் அருட் தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடுகள் குறித்து அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்கு வரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், இராணுவம், பொலிஸார், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர். (ரி-285)

# AI மூலம் வங்கிப் பாதுகாப்பு முறியடிக்கப்படும் அபாயம்

## எச்சரிக்கிறார் தலைமை அதிகாரி

(வோஷிங்டன்)

தகவல் தொழில் நுட்பத்தில் புதிய புரட்சியை AI தொழில் நுட்பம் ஏற்படுத்தியுள்ளது. மருத்துவம், கல்வி, மென்பொருள் என பலதரப்பட்ட துறைகளில் AI ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் "இனி வரும் காலங்களில் (AI) தொழில்நுட்பம் தவறான நோக்கத்துடன் பயன்படுத்தலாம்" என Chat GPT யின் தாய் நிறுவனமான ஓபன் AI நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி சாம் ஆல்ட்மன் ஒரு முக்கிய எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "வரும் காலங்களில், வங்கிகளின் பாதுகாப்பு அம்சங்களை AI முறியடிக்கலாம். அதன் மூலம் பணம் திருடப்படலாம். அத்துடன் அடையாள திருட்டு, இணைய மோசடி, போலி செய்திகள் போன்றனவும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே, இத்தகைய தவறான செயல்களை கட்டுப்படுத்த அரசு, தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்" என சாம் ஆல்ட்மன் தெரிவித்துள்ளார். (ரி)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- தெல்லிப்பளை உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- **நவீந்திரன் கைம்பெண் சுகிர்தா** |
| விண்ணப்பதாரர் பெயர் | :- நவீந்திரன் கைம்பெண் சுகிர்தா |
| முகவரி | :- நாமகள் வீதி,தெல்லிப்பளை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 17. நாமகள் வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 15.11.2021 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு. நாகேந்திரன் பார்த்தீபன் அவர்கள் முகதாவில் இலக்கம் 934 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.ஆறுமுகம் அவர்களால் அளந்து வரைந்த 7755A/7 ஆம் இலக்க 22.04.2021 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு - 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை இறை "கொவ்வன்கட்டுவளை" நிலப்பரப்பு ஒன்றும் குளி நான்கு தசம் ஆறு ஐந்தும் (நில.பர 5 குளி 4.5) இது தெல்லிப்பளை (J/228) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு :- இதன் மிகுதி ஆதனம்
வடக்கு :- இதன் மிகுதி ஆதனம்
மேற்கு :- வீதி
தெற்கு :- பாதை

மேற்குறித்த ஆதனத்தை **நவீந்திரன் கைம்பெண் சுகிர்தா** என்னும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(4892)

# திறந்த அறிவித்தல்

**இஷானியா கலாமன்றத்தின் அங்கத்தவர்களுக்க வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அழைப்பு**

மேற்படி கூட்டம் எதிர்வரும் 10.08.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு கிராம முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற உள்ளதால் எமது அங்கத்துவம் பெற்றவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் இக் கூட்டம் தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் வருகின்ற ஆகஸ்ட் மாதம் (07.08.2025) 07 ஆம் திகதி பி.ப.12.00 மணிக்கு முன் தெரியப்படுத்துமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றேன் .

**இடம் : புதுக்குடியிருப்பு மேற்கு கிராம முதியோர் சங்க மண்டபம்**
**திகதி : 10.08.2025**
**நேரம்: மு.ப.10.00மணிக்கு**

நன்றி

**இவ்வண்ணம்**
**உண்மையுள்ள,**
**செயலாளர்**
**இஷானியா கலாமன்றம்**

(1361)

# யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வாலாம்பிகா அம்மன் தேர்வடம் பிடிப்போம் வானுலகம் இடம்பிடிப்போம் 27.07.2025

அடியார்க்கு வானுலகம் அருள்பவள்

**வந்தே சரணம் புகும் அடியாருக்கு, வானுலகம்**
**தந்தே பரிவோடு தான் போய் இருக்கும் சதுர்முகமும்,**
**பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும், பாகமும் பொற்**
**செந்தேன் மலரும், அலர் கதிர் ஞாயிறும், திங்களுமே.**

அபிராமி அந்தாதி 34

அம்பிகை வந்து சரணடைந்து சிவ சிந்தனையுடன் ஆலயத்தில் **அபிராமி அந்தாதி** ஓதும் அடியவர்களுக்கு மிகுந்த அன்புடன் வானுலக வாழ்வைத் தந்து விடுவாள். பிறர்க்கு தீங்கு எண்ணாமையுடன் நற்பண்புகளுடன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதால் அவர்களை **வானுறையும் நிலைக்கு உயர்த்தி விடுவாள்**. அருள்மிகு அம்பிகை பிரமாவின் நாவில் சரஸ்வதியாகவும், விஸ்னுவின் திருமார்பில் இலட்சுமியாகும், சிவனது இடப்பக்கத்திலும் சமமாக இருந்தும், இந்திரலோகம் பொற் தாமரையிலும் சூரிய சந்திர மண்டலங்களிலும் எங்கும் வியாபிக்க இருந்து அடியவர்களுக்காகத் தான் போய் உடன் உறைந்து அருள்கிறாள்.

**27.07.2025 அன்று ஞாயிறு வைத்தீஸ்வரன் அம்பிகை வாலாம்பிக்காக தேர் வடம் பிடித்தும், அடுத்த நாள் 28.07.2025** பூரம் அன்று தீர்த்தோற்சவம் தரிசித்து வானுலகாகிய **ஜீவன் முத்தி எய்த, திருமுறைகள் அபிராமி அந்தாதி** ஓதி பிரார்த்திப்போம், இடம் பிடிப்போம் வான் உலகத்தில் பிறவி இல்லாத பெருவாழ்வு பெறுவோம்.

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் அருள்மிகு அம்பாள் தேர்த்திருவிழாத் தினமும், மாணிக்கவாசகர் மடாலயத்தில் அபிஷேகமும் அன்னதான மகேசுவர பூசையும் திருவாசக முற்றோதலும் 27.07.2025 ஞாயிறு மகம் நட்சத்திரத்தில் ஓதும் சிறப்பும்** மாணிக்கவாசகர் குரு பூசை ஆனி மாத சிறப்பும் ஒவ்வோர் மாதத்தில் மகத்தில் திருவாசக முற்றோதல் நடைபெறுவது "திருவாசகம் ஓதி முத்தி நெறியில் சித்தம் எல்லாம் சிவமாக, பழவினைகள் நீங்கி இறைவன் திருவடி சேரலாம் மக நட்சத்திரம் ஒரு தனிச் சிறப்பு"

அண்ணாமலை ஆலயம் பெருங்கோபுரம் கட்டியவர் வல்லபமகாராஜ மன்னன் மாசி மாத மகத்தில் இறைவன் திருவடி சேர்ந்தவர். அவருக்கு பிள்ளைகள் இல்லை. அதனால் இறைவனே ஈமைக்கடன், நீர்க்கடன் செய்த தினம் மாசி மகம், இன்னும் பலபல மகம் நட்சத்திரத் சிறப்பு-மக நட்சத்திரத்தில் திருவாசகம் ஓதுவோர் இறைவன் அருள் முத்தி கிடைக்கும்.

(ரி-3504)

**க.கு.க.சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம்**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 40 நாடுகளுக்கு விசா விலக்கு

(கொழும்பு)'

மேலும், 40 நாடுகளுக்கு விசா இல்லாத நுழைவை நீட்டிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஐக்கிய இராச்சியம் உட்பட ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னர் விசா கட்டண விலக்கு அளித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார். இந்த முடிவால் அரசாங்கத்திற்கு ஆண்டுக்கு 66 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடி வருவாய் இழப்பு ஏற்படும் என்றும், சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் தொடர்புடைய வருமானத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு பற்றாக்குறையை ஈடுசெய்யும் என்றும் கூறினார். (நி)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
05 - 09 - 1952



இறைவன் அடியில்
22 - 07 - 2025

### அமரர். சண்முகம் தர்மலிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அமரர். சண்முகம் தர்மலிங்கம் அவர்கள் 22.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற மலர் அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன், கிருபாகரன், சுகிர்தா, அனுஷியா அவர்களின் அன்புத் தந்தையும் திஷியா, இந்துயாழினி, லக்ஸ்மன், விஜிதரன் அவர்களின் அன்பு மாமனாரும் மஜினன், கியாஸ், பவிஷியா, சர்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.07.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் வீட்டில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொக்குவில் வளாகவீதி,
கொக்குவில்.

தகவல்:- குடும்பத்தினர்
077 182 3659

(1354)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**18, மெய்கண்டான் பாடசாலை 2ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 8**

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் - 8 மெய்கண்டான் பாடசாலை 2 ஆம் ஒழுங்கையிலுள்ள இல.18 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு **தம்பிமுத்துகுமரையா கைம்பெண் சிவக்கொழுந்து** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 379/03.01.1962ஆம் இலக்க உறுதியால் **நாகலிங்கம் தில்லைநாதனும் பெண் சுந்தரேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடிஉறுதி பற்றிய விபரங்களோ, முற்பதிவு விபரங்களோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**கதிரவேலு கெங்காதரம்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 610/26.09.1965ஆம் இலக்க உறுதியால் குறித்த **தம்பிமுத்துகுமரையா கைம்பெண் சிவக்கொழுந்து** ஆகியவரிமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**இராசா செல்வநாயகம் பெண் இராசேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8462/19.06.1970ஆம் இலக்க உறுதியால் குறித்த **கதிரவேலு கெங்காதரம்பிள்ளையும் பெண் தபோதனியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் சொரியலாய் 1/2 அரைப்பங்கினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தையா புண்ணியமூர்த்தியும் பெண் கௌரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12713/16.05.1981ஆம் இலக்க உறுதியால் குறித்த **கதிரவேலு கெங்காதரம்பிள்ளையும், இராசா செல்வநாயகமும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த முழு ஆதனத்தினையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**தெய்வேந்திரன் குவைற்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2668/ 26.05.2024 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா புண்ணியமூர்த்தியும் பெண் கௌரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தெய்வேந்திரன் குவைற்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **இரு ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தெய்வேந்திரன் குவைற்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(4891)

## இராசிபலன்

26.07.2025
ஆடி10, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 12.34 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 6.11 மணிவரை
சுப நேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்

வளவன்





புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.





விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன நன்மையுண்டு.





செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.





அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.





சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.





விருந்தினர்கள் வருகையால் சுப விரயங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச் சுமை அதிகரிக்கும்.





வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,





குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழிகளை கையாளுவீர்கள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர்.





தொழிலில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கடினமான வேலை களைக் கூட நயமாகப்பேசி முடித்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரம் வகையில் அமையும்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங் களில் ஆர்வம்

கண்டிப்பாய் இரு ஆளால் ஜோயப்படதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானியானார் விடத்தல்தீவை பூர்வீகமாகக் கொண்ட அனுஜன்




(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவினை பூர்வீகமாகக் கொண்ட அனுஜன் என்பவர் விமானியாக விமானி உரிமத்தைப் பெற்றுள்ளார்.

1998 ஆம் ஆண்டு பிறந்த அனுஜன் தமது ஆரம்பக் கல்வியை மன்னார் லூயிஸ் முன்பள்ளியிலும் தொடர்ந்து தரம் 1 தொடக்கம் 3 வரை புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றிருந்தார்.

தொடர்ந்து பின்லாந்து தேசத்தில் மின்னியல் மற்றும் தானியங்கி தொழில்நுட்பத்தில் தொழில் சார்ந்த உயர்நிலை இரண்டாம் நிலைத் தரத்தின் தகுதியையும் மின்னியல் பொறியியலாளர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

தற்போது விமானியாக சரித்திரத்தில் இடம்பிடித்து சாதனை புரிந்துள்ளார். அவர்களுக்கு எமது சமூகம் சார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (க-8)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்தியக் கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய தலைவரது 25 ஆவது ஆண்டு கௌரவிப்பு விழாவும் இணையப் பொதுக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று காலை 10 மணிக்கு யாழ். பிராந்தியக் கூட்டிணைக் கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் பொ. கெங்காதரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். (8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று காலை 9 மணிக்கு இல.63 நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள யாழ் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே உயிர காக்கும் இவ் உன்னதப் பணியில் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்குமாறும் குருதிக் கொடையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவிருப்பதனால் ஆர்வமுள்ளவர்கள் பெயர் விபரங்களை 070 366 3604 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# புதுக்குடியிருப்பில் நெல் அறுவடைவிழா

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மன்னாகண்டல் 3ஆம் பிரதேசத்தில் இயந்திரம் மூலம் நாற்று நடுகை செய்யப்பட்ட வயலின் நெல் அறுவடை விழா நேற்று இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மந்துவில் போதனாசிரியர் புவிராஜசிங்கம் பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த அறுவடை நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப் பாளர் கிருபவதனி சிவதீபன், கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் விவசாய நிபுணர் க.வசந்தன், முல்லைத்தீவு மாவட்ட பாட விதான உத்தியோகத்தர் இளங் கீரன், மற்றும் பாடவிதான உத்தியோகத்தர் திருமதி கேமா கமலதீபன், கிராம சேவையாளர் கஜகோகுலன், பொருளாதார அபிவிருத்தி உத் தியோகத்தர், மற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவ சாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற் கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க இரத்த அழுத்தம் கட்டுப் பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச் சினைகள் தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள் எளிய முறை குண்டலினி தியானப்பயிற்சிகள் உயிர் வளத்திற்கான காயகல் பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப்படும். பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலைப் பேராசிரியர் K. R. முனிரத்தினம் வழங்கு வார்கள்

தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (8)

# யாழில் வீசிய பலத்த காற்று
## வீட்டின் மேல் முறிந்து விழுந்த மரம்

(யாழ்ப்பாணம்)

யாழில் அண்மையில் வீசிய பலத்த காற்று காரணமாக வீடு ஒன்றின் மீது தேக்கு மரம் முறிந்து விழுந்ததால் வீட்டின் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரி வித்துள்ளார்.

சோமஸ்கந்த கல்லூரி வளாகத்தில் காணப்பட்ட தேக்கு மரமானது அருகில் உள்ள வீட்டின் மீது முறிந்து விழுந்ததாலே இவ்வாறு அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் உயிர்ச்சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. (8-104)

# குருநகர் புதிய கடற்கரைவீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(குருநகர்)

குருநகர் புதிய கடற்கரை வீதியில் அமைந்துள்ள பாலம் சேதமடைந்து காணப்படுவ தால். அப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்து செய்வதில் பாரிய பிரச்சினையை எதிர் கொண்டு வருவதாக அப்பிர தேச மக்கள் தெரிவித்துள் ளனர். இவ் விடயம் தொடர்பாக பல தடவைகள் உரிய அதி காரிகளுக்கு அறிவித்தும் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை

மழைக் காலத்தில், மின் சாரம் இல்லாத நேரத்தில் இத னூடாகப் பயணிப்பது பெரும் ஆபத்தை விளைவிக்கும் எனவே மேற்படி பாலத்தினை புனரமைத்துத் தருவதற்கு சம் பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (நி-8-106)





கொமர்ஷல் வங்கி முள்ளியவளை கிளையினால் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் (2024) சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி முள்ளியவளை கொமர்ஷல் வங்கிக் கிளையில் கிளை முகாமையாளர் செல்வரட்ணம் தினேசன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் அருளம்பலம் ஜெயபாலன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் 16 பாடசாலைகளைச் சேர்ந்த 27 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியினால் கௌரவிக்கப்பட்டனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 350 | 180 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 500 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 400 | 400 | 250 | 400 |
| கரட் | 450 | 500 | 350 | 400 |
| பூசணி | 140 | 150 | 100 | 100 |
| புடோல் | 100 | 150 | 100 | 120 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 400 |
| வெண்டக்காய் | 140 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 330 | 250 | 280 | 400 |
| பயற்றங்காய் | 700 | 1000 | 500 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 350 | 600 |
| போஞ்சி | 550 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 160 | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 250 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 200 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 80 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 219 மருந்தகங்களின் உரிமம் இரத்து

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஜூலை 18 வரையிலான காலப்பகுதியில், நாட்டில் உள்ள 219 மருந்தகங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் இந்தத் தகவலை வழங்கினார்.

2024-2025 ஆம் ஆண்டுக்கான உரிமங்களை புதுப்பிக்க தேசிய மருத்துவ ஒழுங்குமுறை ஆணையம் 2,039 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

இதில் 1,820 மருந்தகங்களுக்கே உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 219 மருந்தகங்களுக்கு உரிமம் வழங்கப்படவில்லை.

137 மருந்தகங்களுக்கு நிரந்தர மருந்தாளுநர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக, அவர்களின் உரிமங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

82 மருந்தகங்களின் உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள், சமூக மருந்தக நடைமுறைகளுக்கான வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறியதால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மருந்தகங்கள் பொதுமக்களின் நலனுக்காக இயங்குகின்றன. எனவே, தர நிர்ணயங்களையும், தொழில்முறை வழிகாட்டுதல்களையும் கடைப்பிடிக்காமல் இயங்கும் மருந்தகங்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்தார். (நி)


## விற்பனைக்கு

அனைத்து தடுப்பூசிகளும், மருந்துகளும் வழங்கப்பட்ட, ஆரோக்கியமான ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**ஒருமாதக் குஞ்சுகளில் இருந்து ஐந்து மாதக் குஞ்சுகள் வரை உண்டு.**

**LOTUS FARM**

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
தொ.பே: 077 327 1713

(C-219)


## மணிவிழா வாழ்த்துக்கள்



செல்வி. **சசிகலாதேவி பாலானந்தன்** (B.A, Trained,SLTS-I)

சிரேஷ்ட ஆசிரியர் யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

**சேவை விபரம்**

- யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை (17.08.1988 -19.01.1992)
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை (20.01.1992 - 31.12.1993)
- யா/ குடத்தனை அ.த.க பாடசாலை (01.01.1994 - 31.12.1997)
- யா/கலட்டி றோ.க.த.க வித்தியாலயம் (01.01.1998 - 31.12.2008)
- யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை (01.01.2009 - 31.12.2019)
- யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை (01.01.2020 - 25.07.2025)

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காய் நிறைவான சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரின் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

Wish You All the Best

வாழ்த்துவோர்-- பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

(4883)

## மணிவிழா வாழ்த்துகள்

**திருமதி. கிருஷ்ணமலர் வரதராஜன்**

தமிழ்பாட ஆசிரியர் (SLTS - I)

**சேவைக்கால விபரம்**

அ/ விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் (1993.02.08 - 1995.07.20)

கல்பிட்டி/ அல்-அக்ஷா தேசிய பாடசாலை (1995.07.21 - 2013.12.31)

யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் (2014.01.01 - 2025.07.25)


வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

Best Wishes



(4875)

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



செல்வி.
**கலைவாணி விஸ்வலிங்கம்**
(SLTS - I, ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர்)

**சேவை விபரம்**

(வருடங்கள் 36, மாதங்கள் 11, நாட்கள் 19)

- கிளி/புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம் - (06.08.1988 - 31.12.1989)
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - (01.01.1990 - 31.12.1991)
- கிளி/புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம் - (01.01.1992 - 07.02.2002)
- வவு/நொச்சிக்குளம் இல. 01 கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் - (08.02.2002 - 31.12.2002)
- வவு/ புதுக்குளம் மகா வித்தியாலயம் - (01.01.2003 - 15.01.2006)
- வவு/தாலிக்குளம் அ.த.க பாடசாலை - (16.01.2006 - 27.04.2006)
- வவு/இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை - (28.04.2006 - 01.04.2011)
- வவு/பூவரசங்குளம் மகா வித்தியாலயம் - (02.04.2011 - 31.12.2012)
- வவு/இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை - (01.01.2013 - 31.12.2018)
- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி - (01.01.2019 - 25.07.2025)

எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் கடமையாற்றி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மனதில் இடம்பிடித்த உங்கள் ஓய்வுக்காலம் சிறப்புறவும் 37 ஆண்டுகால ஆசிரியப்பணியின் மகத்துவம் நிலைபெறவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(1360)

வாழ்த்துவோர்--
அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி

## ஆடிப்பூரவிழா



தேடிவரும் அன்பருக்கு கோடி வரம் அருளும் ஆடிப்பூரநாயகி நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பிகைக்கு அரோகரா

**அடியார்களே!**

நாளை மறுதினம் 28.07.2025 திங்கட்கிழமை நயினை நாகபூசணிஅம்மன் ஆலயத்தில் அம்பிகைக்கு ஆடிப்பூரவிழா மிகவும் சிறப்புற நிகழ்த்த திருவருள் பாலித்துள்ளது. காலை விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பிகைக்கு பூரகர்மா (ருது சோபன விழா) நடைபெற்று தீபாராதனைகள் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இத் திருநாளில் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையினர் வழமை போல அன்னதானம் வழங்க அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.


**நிர்வாகம்**

**ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை நயினாதீவு-02**

(C-3465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்யுத்த வீரர் ஹல்க் ஹோகன் 71 வயதில் காலமானார்!




(வோஷிங்டன்)

பிரபல WWE மல்யுத்த வீரரான ஹல்க் ஹோகன் தனது 71 வயதில் மாரடைப்பு காரணமாக காலமானார். மல்யுத்த போட்டியின் முடி சூடா மன்னனாக ஒரு காலத்தில் விளங்கிய ஹல்க் ஹோகன் WWE நிறுவனம் இன்று மாபெரும் சாம்ராஜ்யத்தை படைத்ததற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளார்.

இவரது இயற்பெயர் அவரது உண்மையான பெயர் டெர்ரி ஜீன் போலியா ஹல்க் ஹோகன் தன்னுடைய 71 வது வயதில் ஃப்ளோரிடாவில் உள்ள தனது வீட்டில் மயங்கி கிடந்துள்ளார்.

இதனை அடுத்து வீட்டில் இருந்தவர்கள் அவசரகால உதவிக்கு அழைத்திருக்கிறார்கள். இதனை அடுத்து மருத்துவ உதவிக்குழுவினர் ஹல்க் ஹோகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோதே அவருடைய உயிர் பிரிந்து விட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

ஹல்க் ஹோகனுக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவருடைய உயிர் பிரிந்ததாக முதல் கட்ட செய்திகள் வெளியாகியுள்ளது.

ஹல்க் ஹோகன் அண்மையில் கழுத்து பகுதியில் காயம் ஏற்பட்டதற்காக சிகிச்சை மேற்கொண்டார்.

அப்போது அவர் கோமாவில் சென்று விட்டதாக பல வதந்திகள் கிளம்பின. எனினும் அவர் நலமுடன் இருந்ததாக அவருடைய மனைவி தெரிவித்த நிலையில், தற்போது ஹல்க் ஹோகன் உயிரிழந்துவிட்டதாக செய்தி வெளியாகியிருப்பது ரசிகர்களை அதிர்ச்சி அடைய செய்திருக்கின்றது. (நி)

# தாய்லாந்து – கம்

# எல்லையில்

## எல்லைகளை மூடிய த

(தாய்லாந்து)

**தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகளுக்கு இடையே உள்ள எல்லையில் பெரும் மோதல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அண்மையில் எல்லையில் ஒரு கண்ணிவெடி வெடித்ததில் ஐந்து தாய்லாந்து வீரர்கள் காயமடைந்த நிலையில் இதைத் தொடர்ந்து இரு நாடுகளும் தங்கள் தூதர்களை திரும்பப் பெற்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் எல்லையில் இரு நாடுகளும் பீரங்கி மற்றும் ரொக்கெட் குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண

தாய்லா

பயன்படுத்

களையும் ந

ஒரு தா

குழந்தைக

கொல்லப்ப

மற்றும் 3

டைந்ததாக

தார அ

ளது.

கம்போ

பொதுமக்க

எல்லை



## துருக்கியில் பயங்கர காட்டுத்தீ! 10 தீயணைப்பு வீரர்கள் உயிரிழப்பு

(அங்காரா)

துருக்கியின் மத்திய பகுதியில் உள்ள எஸ்கிசெஹிர் மாகாணத்தின் மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்களில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும் 14 வீரர்கள் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துருக்கி வனத்துறை அமைச்சர் இப்ராஹிம் யுமக்லி இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் "தீ அணைக்கும் பணியின் போது திடீரென காற்றின் திசை மாற்றமடைந்தது. இதனால் மொத்தம் 24 வீரர்கள் தீயில் சிக்கிக்கொண்டனர்.

அதில் 10 பேர் உயிரிழந்தனர்.

மீதமுள்ளவர்கள் பலத்த காயங்களுடன் [illegible] சிகிச்சை பெற்று வருகின்றனர்" எனத் தெரிவித்தார்.

தற்போது மத்திய மற்றும் மேற்கு துருக்கியின் ஐந்து பகுதிகளில் காட்டுத் தீ தீவிரமாகப் பரவி வருகின்றது.

அவற்றை கட்டுப்படுத்தும் பணிகளில் வனத்துறையும், தீயணைப்புத் துறையும் முழு அளவில் ஈடுபட்டுள்ளன.

அரசாங்கம், மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளுக்கு தீ பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சில பகுதிகளில் மக்கள் பாதுகாப்புக்காக இடம் பெயர்ந்தும் வருகின்றனர்.

துருக்கியில் இவ்வாறான காட்டுத் தீயால் ஏற்பட்ட பெரிய உயிரிழப்பு இது முதல் முறை யல்ல.

கடந்த ஆண்டுகளிலும் வறட்சியான காலநிலை, கடும் காற்று, மற்றும் காடுகளில் கருகி விழும்

விறகு போ

பரவல் அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# கம்போடியா
# மோதல்!
# ய தாய்லாந்து



மேற்கொண்டுள்ளன.

தாய்லாந்து F16 விமானங்களை பயன்படுத்தி வான்வழித் தாக்குதல்களையும் நடத்தியது.


ஒரு தாய்லாந்து வீரர் மற்றும் குழந்தைகள் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 14 வீரர்கள் மற்றும் 32 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தாய்லாந்து சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கம்போடியா தரப்பில் சுமார் 4 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

எல்லையோர கிராமங்களில் இருந்து 4,000 இற்கும் மேற்பட்டோர் வெளியேற்ற மையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தாய்லாந்து அனைத்து நில எல்லைகளையும் மூடியுள்ளதுடன், தங்கள் குடிமக்களை கம்போடியாவை விட்டு வெளியேற வலியுறுத்தியுள்ளது. மேலும், இரு நாடுகளும் மோதலுக்கு ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகின்றன. (நி)

விறகு போன்ற காரணங்களால் தீ பரவல் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



## பிரித்தானியாவில் தீவிரமடையும் தொழிற்சங்கப் போராட்டங்கள்




(லண்டன்)

பிரித்தானியாவில் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்த போராட்டங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன.

முக்கியமாக போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறைகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், வாழ்வாதாரச் செலவுகளின் அதிகரிப்பை எதிர்கொண்டு, தங்களுக்கு நியாயமான சம்பள உயர்வு மற்றும் வேலை நிலைத்தன்மை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தங்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருவதால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுவதோடு, நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளும் இடையூறுகளை சந்தித்து வருகின்றன.

குறிப்பாக ரயில்வே மற்றும் பேருந்து பணியாளர்கள் தொடர்ச்சியான வேலைநிறுத்தங்களை மேற்கொண்டுள்ளதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனுடன், தேசிய சுகாதார சேவையில் (NHS) பணிபுரியும் செவிலியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் சம்பள உயர்வுக்கான கோரிக்கையுடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது மருத்துவ சேவைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதோடு பொதுமக்களும் இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

பிரித்தானிய அரசு, நீண்டகாலமாக நிலவும் தொழிற்சங்க கோரிக்கைகளை தீர்க்க முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில், இன்னும் எந்தவொரு உடன்பாடும் எட்டப்படாததால் தொழிற்சங்கங்கள் தங்களது போராட்டங்களைத் தொடர முடிவு செய்துள்ளன.

இதனால் பொதுமக்கள் அச்சத்திற்குள்ளாகியிருப்பதோடு, நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளும் தடுமாற்றமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தென்கொரியாவில் கொடூரம்

## இலங்கையருக்காக குரல்கொடுத்த தென்கொரிய ஜனாதிபதி

(சியோல்)

தென்கொரியாவில் இலங்கை தொழிலாளர் ஒருவர் சக தொழிலாளர்களால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த சித்திரவதை சம்பவம் தொடர்பில் தென்கொரிய ஜனாதிபதி உடனடியான நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஜியோல்லாவின் நஜு என்ற நகரில் உள்ள ஒரு செங்கல் தொழிற்சாலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

புதிய ஊழியர் ஒருவருக்கு பணியைச் சரியாக கற்றுக்கொடுக்கவில்லை என்பதற்காக ஏனைய ஊழியர்களால் இலங்கை ஊழியர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான காணொளி அதிகமாக பகிரப்பட்டதை அடுத்து, தென்கொரிய ஜனாதிபதி இந்த விடயத்தில் நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளார்.

எந்தவொரு மனித உரிமை மீறலுக்கும் தமது நாட்டில் இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணி வளர்ப்பு
# பார்வோ எனும் நாய்க்குட்டிகளின் காலன்

## கால்நடை வளர்ப்பு - பகுதி - 02

### பார்வோ நோயின் அறிகுறிகள்

◆ நாய் சாப்பிடாது, சோர்ந்து [lethargy] காணப்படும்.

◆ வாந்தி எடுக்கும். பொதுவாக நாய்கள் தொண்டைப் பகுதியில் இருந்து வாந்தி எடுக்கும். எனினும் பார்வோ நோய் உள்ள நாய்கள் வயிற்றுப் பகுதியில் இருந்து எக்கி எக்கி எடுக்கும். ஆரம்பத்தில் வெண்மை நிறத்தில் வெளிப்படும் வாந்தி பிறகு ஜெலி போலவும் இறுதியில் மஞ்சள் நிறத்திலும் காணப்படும்.

◆ வயிற்றோட்டம் காணப்படும். மஞ்சள் பச்சை பிறவுன் நிறத்தில் தொடங்கும் கழிச்சல் இறுதியில் கடும் மணத்துடன் கூடிய இரத்தமாக காணப்படும். இதனை பார்வோ மணம் [parvo smell] என கால்நடை வைத்தியராகிய நாம் சொல்வோம்.

◆ குடல் பகுதியில் காயம் ஏற்பட்டதன் காரணமாக ஏற்படும் எரிவை போக்க தண்ணீருள்ள குளிர்ச்சியான இடங்களில் நாய்கள் வயிற்றை வைத்து படுக்கும். தண்ணீரை குடிக்கும். எனினும் தண்ணீர் குடிக்க குடிக்க கடுமையாக வாந்தி எடுக்கும்.

◆ வாந்தி வயிற்றோட்டம் காரணமாக நாய்கள் நீர்ச்சத்தை இழந்து [severe dehydration] சோர்ந்து விடும். ஓரிரு நாட்களில் மெலிந்து விடும்.

◆ சிகிச்சையளிக்காத 90 விழுக்காடு நாய்கள் 48-72 மணி நேரத்தில் இறந்து விடும்.

◆ இந்த நோய் ஏற்பட்டதும் எவ்வளவுக்கு எவ்வளவு தரமான சிகிச்சையை செய்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நாய்கள் உயிர் பிழைக்கும். உண்மையில் நீர் இழப்பையும் வாந்தியையும் நுண்ணுயிர் பெருக்கத்தையும் சரி செய்யும் சிகிச்சைகளை செய்ய வேண்டும். ஒரு நாய்க்கு ஒரு தடவை சிகிச்சை செய்ய குறைந்தது 45 நிமிடங்களாவது எடுப்பதால் சில சிகிச்சை இடங்களில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை மாத்திரம் தசை மூலம் செலுத்துகிறார்கள். இது பெரும்பாலான நாய்களை காப்பாற்ற உதவாது. அதிஷ்டம் உள்ள நாய்கள் பிழைக்கும். அத்துடன் சட்டவிரோத சிகிச்சையாளர்கள் தம்மிடம் உள்ள மருந்துகளை தசை மூலம் செலுத்தி விடுகிறார்கள். ஒரு இரண்டு நாட்களின் பின் நோய் முற்றிவிட்ட பிறகுதான் சரியான இடத்துக்கு செல்கின்றனர். அது காலம் கடந்திருக்கும்.

சிலர் நாய்கள் சாப்பிடாத போது பலவந்தமாக பால், இறைச்சியை ஊட்டுகின்றனர். இது நாயை மேலும் மேலும் பாதிக்கும். இந்த நோயை பொறுத்த வரையில் மிக விரைவாக பார்வோ சிகிச்சை செய்யக்கூடிய இடத்துக்கு கொண்டு செல்வதுதான் பாதுகாப்பானது.

### நோயைக் கண்டுபிடிப்பது எவ்வாறு.?

◆ வெளிப்படையான அறிகுறிகள் - வாந்தி, இரத்தக் கழிச்சல், மணமுள்ள கழிச்சல்

◆ இரத்த சோதனை

### நோய் ஏற்படுகின்ற காலம்

◆ பொதுவாக மாரி காலம் தவிர்ந்த விட்டு விட்டு மழை பெய்யும் போது அதிகளவில் ஏற்படுகிறது. இந்த பருவத்தில் பல நாய்கள் தொற்றுக்கு உள்ளாகி இருக்கும். தொடர்ச்சியாக நாய்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் இலகுவில் இதனை அனுமானித்து விடுவார்கள். அத்துடன் நாயின் வயது, தடுப்பூசி வரலாறு என்பவற்றை வைத்து நோயை அனுமானிக்கலாம்.

### சிகிச்சைகள்

◆ எவ்வளவு விரைவாக சிகிச்சை வழங்கப்படுகிறதோ அவ்வளவு விரைவாக நாய்கள் உயிர் தப்பும்.

◆ நீர் இழப்பை ஈடு செய்யும் சிகிச்சை - Normal saline, Glucose, LRS போன்ற சிகிச்சை. அவற்றை நாளங்களில் [Intra venusly]

◆ நுண்ணுயிர் கொல்லிகள் காற்று மற்றும் காற்றின்றி வாழ் நுண்ணுயிர்களுக்கு எதிரான சிகிச்சை [ Anti biotics - aerobic /anaerobic ]

◆ வாந்தியை தடுக்கும் சிகிச்சை [Anti emetic]



◆ நோய் எதிர்சக்தியை அதிகரிக்கும் சிகிச்சை. [Immune modulators]

◆ இரத்த மாற்று சிகிச்சை [plasma therapy]

◆ ஓரளவுக்கு குணமாகும் நாய்களுக்கு மென்மையான யோகட், தயிர் போன்றவற்றை சிறிதளவு கொடுக்கலாம். அதிலுள்ள நுண்ணுயிர்கள் நோய் விளைவிக்கும் கெட்ட நுண்ணுயிர்களின் இடத்தைப் பிடித்து விடும்.

◆ குடிக்கும் சிறிதளவு தண்ணீரைவிட அதிக வாந்தியை நாய் எடுப்பதால் அதிக தாகமெடுக்கும். நாய்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கு பதில் ஐஸ் கட்டிகளை வழங்கலாம்.

◆ முடிந்தளவுக்கு வாயால் எடுக்கும் மாத்திரை மருந்துகள் ஆரம்ப நாட்களில் கொடுப்பது பயன்தராது. அவை வாந்தியுடன் வெளியேறி விடும். சில இடங்களில் பல விற்றமின் கனியுப்புகள் வழங்கப்படுகின்றன. அதுவும் தொடக்கத்தில் பயனற்றது.

◆ பார்வோ சிகிச்சைகள் சில நாட்களுக்கு தொடர்ச்சியாக செய்ய வேண்டியவை. தினமும் பல மணி நேரம் செலவாகும். உங்கள் வீடுகளில் அந்த உயிர்கள் எடுக்கும் வாந்தி வயிற்றோட்டத்தை அகற்றியும் அவற்றுக்கு ஆதரவாகவும் மனம் தளராது இருக்கும் பட்சத்தில் அவை உயிர் பிழைக்கும். இந்தச் சிகிச்சைக்கு சகிப்பு தன்மையும் பொறுமையும் மிக அவசியம். சிகிச்சை நிலையத்தில் இந்த சிகிச்சையை செய்யும் போது நாய்கள் எடுக்கும் வாந்தி வயிற்றோட்டம் காரணமாக சிகிச்சை இடம் அசுத்தமாகும். எனினும் எமது சகிப்பு தன்மையும் உரிமையாளரின் ஈடுபாடும் அந்த நாய்களை காக்கும்.

◆ பார்வோ நாய் நின்ற அவற்றின் கழிவுகள் காணப்படும் இடங்களை பிளீச்சிங்தூள் கொண்டு கிருமி நீக்கம் செய்ய வேண்டும் வேறு எந்த கிருமி நீக்கியும் பயனற்றது.

### நோய் வராமல் எவ்வாறு தடுப்பது

◆ தடுப்பூசிகளை கிரமமாக செலுத்துவது.

◆ முதலாவது தடுப்பூசி 6 தொடக்கம் 8 கிழமையிலும்

◆ இரண்டாவது 9 தொடக்கம் 10 கிழமையிலும்

◆ மூன்றாவது 12 தொடக்கம் 13 கிழமையிலும்

◆ பிறகு வருடாந்த நினைவூட்டல் ஊசியும் வழங்க வேண்டும். [ WASAWA guideline]

◆ சகல தடுப்பூசிகளையும் போடும் வரையில் குட்டிகளை கவனமாக கையாளுதல் வேண்டும், தேவை இல்லாமல் வெளியே கொண்டு செல்லக் கூடாது.

◆ நோய் ஏற்பட்ட நாய்களை தனிமைப்படுத்தல். ஏனைய நாய்களுடன் தொடர்பை துண்டித்தல் வேண்டும்.

◆ நாய்க்குட்டிகளை வாங்கும் போது தாய், தகப்பன் பற்றியும் [ parent history] தடுப்பூசி பற்றியும் அறிதல் வேண்டும் என்பதுடன் தாயின் தடுப்பூசி புத்தக விபரத்தை பெறுதல் அவசியம். குட்டிக்கு ஊசி போட்டிருந்தால் புத்தகத்தை கால்நடை வைத்தியரிடம் காட்டி ஊசியின் தரத்தை சோதித்தல் வேண்டும்.

● சகல தடுப்பூசிகளையும் கிரமமாக அந்தந்த நாட்களில் செலுத்துதல். நீண்ட நாட்கள் ஒழுங்காக போடப்படாமல் இருந்தால் மீள ஆரம்பித்தல் வேண்டும்.

◆ இலங்கையில் சுகாதார திணைக்களத்தால் வீடு வீடாக வழங்கும் விசர்நாய் கடி [Anti rabeis] தடுப்பூசியை தமது நாய்களுக்கு போட்டுக் கொள்ளும் பல பேர்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

இவ்வளவுதான் தடுப்பூசி என வெறுமனே இருந்து விடுகிறார்கள். எம்மிடம் வரும் பல நோயுற்ற நாய்களின் உரிமையாளர்கள் இந்த புரிதலுடன் தான் உள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுகாதார பிரிவினரும் இதனை உரிமையாளர்களுக்கு சொல்வதில்லை.


விலங்கு விசர் நோய் தடுப்பூசியை தவிர பார்வோ மற்றும் டிஸ்டெம்பர், ஈரல் அழற்சி,எலிக் காய்ச்சலுக்குரிய [DHL] தடுப்பூசிகளை நீங்கள் பணம் கொடுத்துதான் போட வேண்டும்.

◆ நாய்களுக்கு ஏற்படும் நோய் நிலைமைகள் தொடர்பாக அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.இதற்காக கால்நடை வைத்தியர்களுக்கு மேலதிகமாக கால்நடை வைத்திய தகவல் இணைய தளங்களை பயன்படுத்தலாம். Eg - parvo viral diarrhea in dogs

◆ நாய்களை வாங்கும் போது தாயிடம் முறையாக தாய்ப்பால் குடித்த நாய்கள் சாலச் சிறந்தவை. அத்துடன் நாய் விற்பவர்கள் முதல் தடுப்பூசி செலுத்தி ஒரு வாரமளவில் விற்பது பொருத்தமானது.

என்னால் முடிந்தவரை இந்த பார்வோ இரத்தக் கழிச்சல் நோய் தொடர்பான அனைத்து விடயங்களையும் இந்த கட்டுரையில் தெளிவுப்படுத்தியுள்ளேன். வருடா வருடம் நான் சந்தித்த அனுபவங்களையும் ஏனைய பல துறை சார்ந்த கால்நடை வைத்தியர்களின் ஆலோசனைகளையும் இங்கு இணைத்துள்ளேன்.

முடிந்தவரை இந்த நோய் வராமல் தடுப்பதோடு நோய் வந்த பின் நேரத்தை தாமதிக்காது சரியான சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று உங்கள் உயிரான செல்லப் பிராணிகளை காத்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்பு மிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்த உற்சவம் கடந்த 24 ஆம் திகதி ஆலய தீர்த்தக்கேணியில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

## கிணற்றில் தவறி வீழ்ந்த இரு யானைகள்
# ஒரு யானை உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா வடக்கு, கரப்புக்குத்தி பகுதியில் இரண்டு யானைகள் கிணற்றில் வீழ்ந்த நிலையில் ஒரு யானை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் மற்றைய யானை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற விவசாய கிணறு ஒன்றில் யானைகள் தவறி வீழ்ந்துள்ளதாக அந்த பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலருக்கு நேற்றுக் காலை தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கிராம அலுவலர், வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் பொலிஸாருக்கும் உடனடியாக தெரியப்படுத்தி இருந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பெரும் சிரமத்திற்கு மத்தியில் ஒரு யானையினை மீட்டுள்ளனர். மற்றைய யானை நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அதன் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த இரு யானைகளும் ஒன்றன் பின் ஒன்றாக கிணற்றுக்குள் வீழ்ந்தமையால் ஒரு யானை சேற்றில் புதையுண்டு உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-250)

## டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ்
# வழங்கும் நிகழ்வு



(தருமபுரம்)

பதிவாளர் நாயக திணைக்களத்தின் ஏற்பாட்டில் "பாரம்பரியத்திற்கான டிஜிற்றல்" செயற்றிட்டத்தின் மூலம் டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ் வழங்கும் செயற்றிட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு வலய பிரதி பதிவாளர் நாயகம் ப.பிரபாகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அர சாங்கதிபர் சு.முரளிதரன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் வடக்கு வலய உதவிப்பதிவாளர் நாயகம் தாரகா பிறேம்ஆனந், மாவட்ட மேலதிக அரசாங்கதிபர் காணி அஜிதா பிரதீபன், பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பிரதேச செய லாளர்கள், மாவட்ட பதிவாளர்கள், உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# தண்ணீருக்காக அலையும் கால்நடைகள்

(தருமபுரம்)

புளியம் பொக்கனை கமநல பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் சிறிய குளங்களாக மூன்று குளங்கள் உள்ளன. தற்பொழுது வறட்சியின் காரணமாக மூன்று குளங்க ளிலும் நீர் முற்றாக வற்றியதன் காரணமாக இப்பகுதியில் உள்ள கால்நடைகள் நாளாந்தம் தண் ணீருக்காக அலையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது சிறுபோக நெற் செய்கை அறுவடை முடிவடைந்த நிலையில் கல்மடு குளத்திலிருந்து தற்பொழுது ஒரு மாத காலமாக நெத்தலியாறு ஊடாக புளியம்பொக்கனை விவசாய நிலம் ஊடாக கடலுக்குள் நீர் வீணாக செல்கிறது.

இதனை சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகள் அரச அதிகாரிகள் கருத்தில் கொண்டு குளத்திற்கு உடனடியாக நீரினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-316)

# மன்னார் நகர சபையின் விசேட கூட்டம் 8 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை

(மன்னார்)

மன்னார் நகர சபையின் விசேட கூட்டமானது நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிலையில் 8 உறுப்பினர்கள் கலந்து கொள்ளாத நிலை யில் ஏனைய 8 உறுப்பினர்களுடன் குறித்த கூட்டம் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் காசோலையில் முதலாவது மற்றும் இரண்டாவது கையொப்பமிடுதலுக்கான அனுமதி, ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டத்தினை சனசமூக நிலையத்திற்கு ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுவதற்கான சபையின் அனுமதி, சபை நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள நகர மண்டப மின்னினைப்புக்கான மின்மாற்றி அறையினை அமைப்பதற்கு சனசமூக நிலையத்திற்கு ஒப்பந்தம் வழங்கிமேற்கொள் வதற்கான சபையின் அனுமதி, நகரசபையில் கடமையாற்றும் ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் நிரந்தர அலுவலர்கள் சம்பளத்தை வழங்குவதற்கும், நிரந்தர அலுவலர்களின் சம்பளத்தில் 20 வீதத்தினை சபை நிதியில் வழங்குவதற்கும் சபையில் தவிசாளரினால் அனுமதி கோரப்பட்டது.

இதன்போது சபையில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்த நிலையில் குறித்த விடயங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது.

மன்னார் நகர சபையில் 16 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில் 8 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8-285)


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :- **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
விண்ணப்பதாரரின் பெயர் :- மரியதாஸ் நெவின்ஸ் பெண் மேரிறஜனி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் :- சொந்தக்காரர்
ஆதன இல:- 588 வீதி :- மாதகல் வீதி வட்டாரம் :- 01

வட்டாரம் 01 **மாதகல் வீதி** ஆதன இலக்கம் **588** இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவு J/152 மாதகல் கிராம அனுவலர் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று மாதகல் இறை **"செட்டி சீமா"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **51/4** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் தமக்கு உரித்தானது என பிரசித்த நொத்தாரிசு **ப.இராசகுரு** அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட **3667** ஆம் இலக்க **2002.12.09** ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் கந்தசாமி பெண் பரமேஸ்வரியும் பிள்ளைகளும் தமக்கு சொந்தமானது என 51/4 பரப்பு காணியை மரியதாஸ் நெவின்ஸ் மேரிறஜனிக்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன விபரம்**

கிழக்கு :- செல்வராசா பெண் தவமணி
வடக்கு:- அம்பலவாணர் வயித்துலிங்கம் செல்லர் ரவீந்திரனுக்கும் வாத்தலேமைக்கும் பெண் அஞ்சலேமைக்குரிய காணி
மேற்கு :- வாத்தலேனத்துக்கும் பெண் அஞ்சலேனத்துக்குமுரிய காணி
தெற்கு :- தன்னிலத்தில் போக்குவரவு செய்வதற்காக விடப்பட்ட 9 அடி அகலமுள்ள ஒழுங்கை

மேற்குறித்த ஆதனம் **மரியதாஸ் நெவின்ஸ் பெண் மேரிறஜனி என்பவருக்கு 3667 இல 2002.12.09 திகதிய உறுதி மூலம் அறுதியாக கையளிக்கப்பட்டுள்ளது.** நில அளவையாளர் அ.சந்தியாம்பிள்ளை என்பவரால் 2021.02.28 ஆம் திகதி 3112 இலக்க நில அளவைப்படம் மூலம் ஆதனம் நிலப்பரப்பு 5 குளி ஐந்து சதம் ஏழும் ஆக காணப்படுகின்றது. மரியதாஸ் நெலின்ஸ் பெண் மேரிறஜனி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மரியதாஸ் நெவின்ஸ் பெண் மேரிறஜனி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(4895)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 830





அத்தையைத் தேடிப் பிடிக்கப் போகிறேன். நானும் வரட்டுமா? எதற்காக?

பெரியம்மாவை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காகத்தான். எதற்காகப் பெரியம்மாவை நீ தெரிந்து கொள்ள வேண்டும்?

சேந்தன் அமுதன் தன் பெரியம்மாவின் பழைய வரலாற்றைச் சிறிது பூங்குழலியிடம் அறிந்து கொண்டிருந்தபடியால் அவளைப் பார்க்க ஆவலாயிருந்தான். அத்துடன் பெரியம்மா தன் கட்சியிலிருந்து பூங்குழலியின் மனத்தை மாற்றுவதற்கு உதவி செய்யக் கூடும் என்ற ஆசையும் அவனுக்கு இருந்தது.

எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. ஆனால் பெரியம்மாவைத் தெரிந்து கொள்ள விரும்புவதற்குக் காரணம் வேண்டுமா, என்ன?" என்றான்.

பூங்குழலி சற்று யோசித்துவிட்டு, "சரி வா! போகலாம். உன்னையும் அழைத்துச் சென்றால் பெரியம்மாவைப் பிடிப்பது சற்றுப் பிரயாசையாக இருக்கும். ஆனாலும் யார் விடுகிறார்கள்? படகை இங்கேயே கட்டிப் போட்டு விட்டுப் போகலாம்!" என்றாள்.

அவ்விதமே படகை ஒரு தாழம்பூப் புதரின் அடியில் மறைவாக விட்டுக் கட்டியும் போட்டுவிட்டு இருவரும் கோடிக்கரைக் காட்டை நோக்கிச் சென்றார்கள்.

நடந்து கொண்டே சேந்தன் அமுதன், "பூங்குழலி! பெரியம்மா இலங்கைத் தீவிலோ பூதத் தீவிலோ இருக்கிறாள் என்று சொன்னாயல்லவா?" என்றான்.

"ஆமாம், சில சமயம் இலங்கைத் தீவிலும், சில சமயம் பூதத் தீவிலும் இருப்பாள்." இங்கே அடிக்கடி வருவதுண்டா?

"இல்லை அபூர்வமாகத்தான் வருவாள். நான் வெகு நாள் அவளைப் போய்ப் பார்க்காமலிருந்தால் வருவாள்."

"இப்போது உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாளா?" "இந்தத் தடவை வேறு காரியமாக வந்திருக்கிறாள் என்று தோன்றுகிறது." "வேறு என்ன காரியம்?"

"அவளுடைய சுவீகாரப் புதல்வன் கடலில் முழுகிப் போய் விட்டானா, தப்பிப் பிழைத்துக் கரை சேர்ந்தானா என்று தெரிந்து கொள்வதற்கு வந்திருக்கலாம். இளவரசர் கப்பலேறிப் புறப்பட்ட பிறகு கடலில் சுழிக் காற்று அடித்தது அத்தைக்குத் தெரியும் அல்லவா?"

"அருள்மொழிவர்மர் இவளுடைய சுவீகாரப் புதல்வரா? அப்படியானால் பெரியம்மாவின் சொந்த மகன் யார்?"

"அதுதான் எனக்குத் தெரியவில்லை ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அந்த இரகசியத்தை நான் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ளப் போகிறேன்."

"சொந்த மகன் உயிரோடிருக்கிறானா, அல்லது இறந்து போய் விட்டானா?"

"ஆம், அவன் இறந்து போயிருக்கவும் கூடும் யாருக்குத் தெரியும்?" என்று சொன்னாள் பூங்குழலி.

சற்றுப் பொறுத்து, அமுதா! அத்தையைப் பார்த்தாயே! உன் அன்னையின் முகஜாடை யாயிருப்பதாகச் சொன்னாய் வேறு யாருடைய முகமாவது ஞாபகத்துக்கு வந்ததா? என்று கேட்டாள். ஏதோ ஞாபகம் வருவதுபோலத் தோன்றுகிறது.

(தொடரும்)




## காடுகளைப் பாதுகாப்போம்



அது ஒரு அடர்ந்த காடு, அந்தக் காட்டிலே எல்லா மிருகங்களும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தன. புலி, சிங்கம் போன்றவைகள் கூட அதன் இடங்களில் வாழ்ந்து வந்து கொண்டிருந்தன.

கொஞ்ச நாட்களாக மனிதர்கள் கூட்டம் கூட்டமாக காட்டுக்குள் வருவதும் போவதுமாக இருந்து கொண்டிருந்தனர். இதனால் அமைதியாக இருந்த காடு இவர்களின் வருகையால் நிம்மதி இழந்து தவித்துக் கொண்டிருந்தது.

இது இப்படி இருக்க ஒவ்வொரு விலங்குகள் கூட்டத்திலும், நிறைய விலங்குகள் காணாமல் போகத் தொடங்கின. மான் கூட்டத்திலும், வரிக்குதிரை கூட்டத்திலும், ஏன் யானைகள் கூட சத்தமில்லாமல் காணாமல் போயின. இந்த விலங்குகளின் எலும்புகள் கூட அந்த காட்டில் காணப்படவில்லை.

அங்குள்ள சாதுவான விலங்குகள், அனைத்தும் சிங்கத்தின் மீது சந்தேகம் கொண்டன. சிங்கம்தான் அத்தனை விலங்குகளையும் தனது குகைக்குள் கொண்டு போய் அடித்து சாப்பிட்டு விடுகின்றது என முடிவு செய்தன. இதனால் எப்படியாவது சிங்கத்தை விலங்குகளை கொல்வதை கைவிட வேண்டும் என்று கேட்பதற்கு முடிவு செய்தன.

ஆனால் எப்படி கேட்பது? புலியாரை பார்க்க சென்றன. புலியார் சிங்கத்தின் அளவுக்கு பலசாலிதான் என்றாலும் இரண்டும் ஒன்றை ஒன்று சந்தித்து கொள்வதோ, மோதிக் கொள்வதோ இல்லை, அவைகள் தனித்தனியாக தங்கள் பாதையில் சென்று கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட சூழ் நிலையில் புலியாரிடம் சென்ற மான் கூட்டங்கள் சிங்கம் தங்கள் இனத்தவரை கொன்று குவித்துக்கொண்டுள்ளது, அதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று கேட்டன. புலியார் அவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னது.

சிங்கமும், சரி நானும் சரி, எங்கள் பசிக்கும் போது தவிர பிற உயிர்களை மறந்தும் கொல்ல மாட்டோம், இது வேறு யாரோ செய்யும் சதி, அநாவசியமாய் சிங்கத்தின் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள் என்று அறிவுரை சொன்னது.

ஆனால் மான்களோ, மற்றவைகளோ அதை கேட்கும் மனநிலையில் இல்லை. ஆகவே சிங்கத்தை ஒழிக்க வேறு உபாயம் செய்யலாம் என்று முடிவு செய்து அங்கிருந்து சென்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தல் என்பது ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான அடிப்படைக் கருவியாகும்.
~ ஜோசப் அடிசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனைவராலும் கவனிக்கப்பட வேண்டிய ஜனாதிபதி அநுரவின் உரை

எங்கள் நாட்டின் கல்வி முறையில் உள்ள குறைபாடுகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் (24) பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் ஆற்றிய உரைகள் அனைவரையும் சிந்திக்கச் செய்வன.

ஆம், அதிகாலை 4 மணிக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் கற்பிக்கத் தொடங்குகின்றன. தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று விட்டே மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றனர். பாடசாலை நிறைவடைந்ததும் மீளவும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் மாணவர்களை சுயசிந்தனையுடையவர்களாக எப்படி ஆக்க முடியும். எனவே மாணவர்களை ரோபோக்கள் போல ஆக்கிவிடாதீர்கள் எனப் பெற்றோர்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

தவிர, பாடசாலைகள் தொடர்பில் பிரஸ்தாபித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; அறவே மாணவர்கள் இல்லாத பாடசாலைகள் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என மாணவர்களின் தொகையை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளை வகைப்படுத்தி சுட்டிக் காட்டியிருந்தார்.

இதற்கும் மேலாக, மூன்று மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலையில் மூன்று ஆசிரியர்கள் உள்ளனர்.

அதேநேரம் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளும் நம் மத்தியில் உள்ளன என்றவாறு நம் நாட்டினுள்ள பாடசாலைகளின் சமகால நிலைமைகளை மிகவும் துல்லியமாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்துக் கூறியுள்ளார்.

எங்களின் கல்வி தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறிய தகவல்கள் அத்தனையும் உண்மையானவை.

எனினும் கடந்த காலங்களில் இந்த விடயங்கள் பேசப்படாமல் விடப்பட்டிருந்தன. அதிலும் கடந்த காலங்களில் இந்த நாட்டின் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் நம் நாட்டின் கல்வி முறை தொடர்பில் அறியாதவர்களாகவே இருந்துள்ளனர்.

கல்வி சார்ந்த விவகாரங்கள் குறித்து அவ்வப்போது கல்வி அமைச்சர்களாக இருந்தவர்கள் சில விடயங்களை முன்வைத்தனராயினும் அவை குறித்து தொடர்ச்சியாகப் பேசப்படவில்லை.

கூடவே அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை ஆதரிப்பவர்களாகவே இருந்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பது இங்கு முக்கியமான விடயமாகும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் மீது அவர் குற்றம் சாட்டவில்லை. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிப்பதற்கு ஒரு நேர வரையறை வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்துகிறார். அது நியாயமானது.

கல்வி கற்பது அவசியம் என்பதற்காக மாணவச் செல்வங்களின் பூப்போன்ற மனங்களை கசக்கிப் பிழிந்து கற்பிப்பதென்பது எங்கள் சந்ததியை நாங்களே அழிப்பதாக இருக்கும்.

எனவே எமது கல்வி நிலை குறித்து அநுர குமார திஸாநாயக்க ஆற்றிய உரை என்பது அனைத்துத் தரப்புகளாலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது என்பதுடன் அது தொடர்ந்தும் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

# ரூ.3.6 மில்லியன் நிதி மோசடி

## அநுர அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளிடம்

## வாக்குமூலம் பெறுமாறு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

ரூ. 3.6 மில்லியன் நிதி மோசடிச் சம்பவம் தொடர்பாக வர்த்தக, அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் தொழிலாளர் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க மற்றும் கடுவளை நகர சபையின் மேயர் ரஞ்சன் ஜயலால் ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்கிசை நீதவான் ஏ.டி. சதுரிகா டி சில்வாவினால் நேற்று வெள்ளிக்கிழமை (25) கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பணியகத்துக்கு குறித்த பணிப்புரையானது விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய வேலை நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடம் கொண்ட நிலம் தொடர்பான போலிப் பத்திரத்தைத் தயாரித்து ரூ. 3.6 மில்லியன் மோசடி செய்தமை தொடர்பிலான நேற்றைய வழக்கு விசாரணையின் போது,

கட்டிடப் பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் வசந்த சமரசிங்கவை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் தலைவராக அங்கீகரித்த 2017 செப்ரெம்பர் 3 அன்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் அறிக்கைகள் குத்தகைப் பத்திரங்கள் எண்கள் 166, 206 மற்றும் 207 இன் சான்றளிக்கப்பட்ட பிரதிகள், அத்துடன் கடுவெல மாவட்ட நீதிமன்றம், கல்கிசை மாவட்ட நீதிமன்றம் மற்றும் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கேள்விக்குரிய சொத்தின் காவல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான வழக்குப் பதிவுகளின் நகல்கள், கொழும்பு மோசடி புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகளால் அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக ஆஜரான ஜனாதிபதி வழக்கறிஞர் மைத்ரி குணரத்னவால் சான்றளிக்கப்பட்ட 35 கூடுதல் ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதனையடுத்தே அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் தொழிலாளர் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க மற்றும் கடுவளை நகர சபையின் மேயர் ரஞ்சன் ஜயலால் ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## சர்வதேச நாணய நிதியத்தின்

## ஐந்தாம் கட்ட மதிப்பாய்வை செப்ரெம்பரில் நடத்தத் திட்டம்

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான ஐந்தாம் கட்ட மதிப்பாய்வை செப்ரெம்பர் மாதத்தில் நடாத்த எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜூலி கோசெக் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை நேர் மறையாக இருத்தல், உலகளாவிய சந்தை மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் விதம் தொடர்பிலும் ஐந்தாவது மதிப்பாய்வின் போது மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உலகளாவிய சந்தை, பொருளாதார மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கம் உட்பட நாட்டின் பொருளாதாரம் குறித்த முழுமையான மதிப்பீடு இந்த மதிப்பாய்வின் போது மேற்கொள்ளப்படும்.

கடந்த ஜூலை முதலாம் ஆம் திகதி ஐ.எம். எப் இன் நிர்வாகக் குழு நான்காவது மதிப்பாய்வை நிறைவு செய்து இலங்கைக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியது.

இதன்மூலம், விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி 1.74 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

2024 ஆம் ஆண்டில் நாடு நெருக்கடிக்குப் பிந்தைய 5% பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு ஐ.எம். எப் கவனம் செலுத்துகிறது.

2022 இல் 8.2% ஆக இருந்த இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வீதம், 2024 இல் 13.5% ஆக உயர்ந்துள்ளது. இது வலுவான நிதி செயற்திறனைப் பிரதிபலிப்பதுடன் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததன் மூலம் ஐ.எம். எப் திட்டத்தின் ஒட்டுமொத்த செயற்திறன் வலுவாக உள்ளதாக ஜூலி கோசெக் மேலும் தெரிவித்தார். (ம-7)

## நெடுந்தீவில் கைதான

## தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் ஏழு பேரையும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 06ம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் கடந்த 13ம் திகதி இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் படகுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றைய வழக்குத் தவணையின் போது அவர்களது விளக்கமறியல் காலம் மன்றினால் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 25 படகுகளுடன் 185 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## மாகாண சபைகளை ஒருபோதும் நாம் பலவீனப்படுத்தப் போவதில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

மாகாண சபைகளை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை யென சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க பாராளுமன்றுக்கு நேற்றுத் தெளிவுபடுத்தினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது கேள்வியெழுப்பி உரையாற்றிய இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி சகல அமைச்சுகளும் மாகாண சபைகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிவித்தமை தொடர்பில் பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் கூறுகையில்,

இம்முறை மாகாண சபைகளுக்குச் செலவுக்காகக் கடந்த வருடங்களை விடவும் மூன்று மடங்கு ஒதுக்கியுள்ளோம். எங்களுக்கு வங்குரோத்து அடைந்த நாடே கிடைத்திருந்தது.

வீதிகளை அபிவிருத்தி செய்ய நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நிதியை ஒதுக்கியுள்ளது. இதனால் மாகாணசபை முறைகளைப் பலவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கருதுவது தவறு.

எந்த வீதியாக இருந்தாலும் அந்தந்த வீதிகள் அந்தந்த நிறுவனங்களுக்குச் சொந்தமானவையே என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மறைப்பதற்கு எதுவுமில்லை

## பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எமது அரசிலிருந்தாலும் நடவடிக்கை – பிரதமர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம். அதில் மறைப்பதற்கு எங்களுக்கு ஒன்றும் இல்லை. அனைத்து விடயங்களையும் முன்வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்போம். அதேநேரம் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் எமது அரசாங்கத்துக்கு கீழ் இருக்குமானால் அவர்களுக்கும் சட்டத்தை ஒரேமாதிரியாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்போமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (25) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேட்ட கேள்விக்கு மேலதிக கேள்வியாக முஜிபுர் ரஹ்மான் கேட்ட வினவிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் தனது கேள்வியின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சாரா உயிரிழந்ததாக இறுதியாக தெரிவிக்கப்பட்ட டீ.என்.ஏ. அறிக்கையை நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே போன்று அன்று எதிர்க்கட்சியில் இருந்த நீங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதன் பிரகாரம் தற்போது இந்தத் தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் விசாரணை ஆரம்பித்திருக்கிறது. அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயார்.

ஆனால் தாக்குதல் நடந்த சந்தர்ப்பத்தில்கிழக்கு மாகாணக் கட்டளை தளபதியாக இருந்தவர் தற்போது அரசாங்கத்தில் இருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுர ஜயசேகர, அன்று சாய்ந்தமருதில் குண்டு வெடித்தபோது அந்த இடத்துக்கு ஆரம்பமாக வந்தது இராணுவத்தினராகும்.

அப்படியானால் சாராவுக்கு என்ன நடந்தது? அவரை யார் கடத்திச்சென்றார்கள் என்பது தொடர்பான தகவல் இராணுவத்துக்கு தெரிந்திருக்க வேண்டும். அநுர ஜயசிங்கவுக்கு தெரியாமல் இராணுவத்தினர் அங்குவர முடியாது. அவரும் அந்தச் சந்தர்ப்பதில் தெரிந்திருக்காவிட்டாலும் பின்னராவது இதனைத் தெரிந்திருப்பார்.

அன்றைய அரசாங்கத்துக்கு இந்தத் தாக்குதல் தொடர்பில் சம்பந்தம் இருப்பதாக ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார். அப்படியானால் அன்றைய அரசாங்கத்தின் கிழக்கு மாகாணக் கட்டளை தளபதியாக இருந்த அநுர ஜயசிங்க, தற்போது அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக இருக்கும் நிலையில் அவருக்கு கீழ் உள்ளவர்களே தற்போது இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும்போது அந்த விசாரணை எவ்வாறு நீதியான விசாரணை எனத் தெரிவிக்க முடியும்? என்றார்.

அதற்குப் பிரதமர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

அநுர ஜயசிங்க 2024லேயே பிரதி பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019இலே இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் தொடர்பில் 2019 இல் இருந்து விசாரணை இடம்பெற்று வருகிறது.

அப்போது விசாரணைகளைச் சுயாதீனமாக நடத்த இடமிருந்தது. ஆனால் செய்யவில்லை. இவர்கள் அதிகாரத்தில் இருக்கும்போது இந்த விசாரணையை மேற்கொள்ளவில்லை. அதுதான் பிரச்சினை.

ஆனால் நாங்கள் விசாரணை மேற்கொள்வோம். யாரும் குழப்பமடைய தேவையில்லை என்றார். (ம-7)

## வடக்கு...

வடக்குக் கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த போராட்டமானது யாழ்ப்பாணத்தில் செம்மணி மனிதப் புதைகுழி பகுதியிலும் முல்லைத்தீவில் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகாமையிலும் வவுனியாவில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலும் மன்னாரில் நகர்ப்பகுதியிலும் அம்பாறையில் திருக்கோவில் பகுதியிலும் மட்டக்களப்பில் காந்திப் பூங்கா பகுதியிலும் திருகோணமலையில் சிவன்கோவில் பகுதியிலும் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் தொடர்பாக வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித குலத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தமிழ் மக்களாகிய நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கை தொடர்பான விடயம் ஐ.நா மனித உரிமை பேரவையில் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப்புது தீர்மானங்கள் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டே செல்கிறது. இற்றை வரை இத்தீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைத்ததில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக அண்மையில் இலங்கைக்கு வருகைதந்த ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரால் அவர்களின் வருகை பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எமது தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கானத் தீர்வினை வழங்கக் கூடிய ஆரோக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையிட்டு வருத்தப்படுகிறோம்.

அத்துடன் அண்மையில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியால் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய ஊடக நேர்காணல்கூட எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்விற்குரிய பொறிமுறையாக அமையாத நிலையை நாங்கள் ஊடக செய்திகள் ஊடாகப் பார்க்கிறோம்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அமையப் போவதில்லை. மாறாக சர்வதேச பொறிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதனை வலியுத்தி பல தடவைகள் இலங்கைக்கு உள்ளேயும் சர்வதேசத்திலும் கோரி வருகின்றோம்.

இந்நிலையில் ஐ.நா. இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறைகள் ஊடாகவே தீர்வினை மேற்கொள்ள வேண்டும் எனும் கருத்தினை தங்களது அறிக்கைகளிலும் ஊடக நேர்காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கான பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறையைக் கடந்து சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாக கிடைக்க வேண்டும் என்பதனை மீள வலியுறுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய மக்கள் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளதோடு இதில் அனைத்து பொது மக்களையும் பங்கேற்குமாறு கோருகின்றோம் என்றுள்ளது. (ம-7)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
09 - 11 - 1964



மறைவு
26 - 06 - 2025

கடந்த 26.06.2025 வியாழக்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் வேலாயுதம் தர்மகுலசிங்கம் (அப்பன்)
(யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 26.07.2025 இன்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கேட்பதோடு 28.07.2025 திங்கட்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனைத்து வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியை மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இங்ஙனம்
குடும்பத்தினர்

(4896)



கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Oxford 8 Sri தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
077 978 9467
075 840 4439

(4900)



தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்தில்
வீடு, காணி விற்பனைக்குள்ள உரிமையாளர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 311 9485
076 050 3863

(1365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவாக்குவதற்...

கப்பட்டு வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார். (ம-7)

## செம்மணியில்...

அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அவ்விடங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழ். மயிலிட்டி...

மயிலிட்டித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கப் பயணித்துள்ளனர்.

இவ்வாறு மீனவர்களுடன் பயணித்த படகு கரை திரும்பாததோடு தொடர்பும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## செம்மணி...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"ஐக்கிய தேசியக் கட்சியாலேயே அன்று கறுப்பு ஜூலைக் கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. நிலைமை இவ்வாறு இருக்க, ஜே.வி.பியினரே தமிழர்களுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர் என்ற மிகவும் சூட்சுமமான முறையில் போலிப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பூரண விசாரணைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்நாட்டில் இனவாதம் மற்றும் மதவாதம் என்பன அதிகாரத்துக்காக பயன்படுத்தப்பட்டன. ஊழல், மோசடிகளை மூடிமறைப்பதற்காக அவை பயன்படுத்தப்பட்டன. எனினும் இந்நாட்டில் இனி இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இடமளிக்காது. அரசியல் அதிகாரத்துக்காக இனவாதம், மதவாதத்தைப் பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என்றார். (ம-7)

## தடுப்பில்...

பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று நண்பகல் குடும்பத் தகராறு காரணமாக பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் குறித்த நபரை கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது குறித்த நபர் தான் அணிந்திருந்த சாரத்தின் ஒரு பகுதியைக் கிழித்துத் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதவான் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,315,316)

## கைது செய்யப்...

பருத்தித்துறைப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ததாகவும் 2018 முதல் 2020 வரை ஆயுதங்களும் வெடி பொருட்களும் சேகரித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு 16 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் அவர்களுக்கெதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டது.

பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள், குற்றச்சாட்டுக்கள் யாழ்ப்பாணம் பிராந்தியத்தில் நிகழ்ந்தவையென்பதால், கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் இல்லை என அவர்களின் வாதத்தை ஏற்ற நீதிபதி மகேஷ் வீரமன், குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதும், நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்படாத நிலையில் வழக்கைத் தொடர முடியாதென்று தெரிவித்துள்ளார்.

எனவே குற்றச்சாட்டுக்களிலிருந்து அந்த 16 இளைஞர்களையும் முற்றிலும் விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## 90 எலும்புக்...

மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் இரண்டு மனிதப் புதைகுழிகளில் இருந்தும் 02 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 05 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 81 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 90 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கடந்த சில தினங்களில் அடையாளம் காணப்பட்ட சில எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளமைக்கான சான்றாக அவை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. எலும்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்ட முறைமை, பிரேதப் பெட்டியில் வைக்கப்பட்டுக் காணப்படுவதனால், அவை முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டமையால், அவற்றை மீளவும் மண் போட்டு மூடப்பட்டது. (ம-7,33)

## கொழு...

இதற்கு ஆதரவு கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒரு இலட்சத்துக்கும் அதிக சுற்றுலாவிகள் நாட்டுக்கு வருகை

(கொழும்பு)

ஜூலை மாதத்தின் முதல் 23 நாட்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 45, 188 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் வருடத்தின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 13 இலட்சத்து 13, 232 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும்,

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இது 21.4 சதவீத அதிகரிப்பு எனவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.07.25
சீட்டிழுப்பு இலக்கம் 5901
A 2 4 2 1 2 7
அத சம்பத
A 2 1 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 476
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.25
சீட்டிழுப்பு இலக்கம் 0017
மேடம் 19 22 31 37

தன நிதானய
திகதி - 2025.07.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1931
E 34 59 60 69 E
Double Chance 83804

மெகா பவர்
திகதி 25/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2249
U 09 04 15 39 48

ஜய JAYA
திகதி 2025.07.25
சீட்டிழுப்பு இலக்கம் 0169
P 4 5 7 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4143
சீட்டிழுப்பு திகதி 25.07.2025
V 38 43 56 65
V

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.25
சீட்டிழுப்பு இலக்கம் 1210
தனுசு 11 24 36 39 தனுசு
13900 38



உத்தியோகபூர்வ முடிவுகள்
25.07.2025 வெற்றி வாரம் 0609
A 2 1 2 5 3 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,567,981.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2875
சீட்டிழுப்பு திகதி 2025.07.25 தினம் வெள்ளிக்கிழமை
26 32 51 80 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,917,977.60

சனிதா
திகதி 25.07.2025 வெற்றி வாரம் 5036
10 22 35 77 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,927,182.40
ரூ. 50,000/-
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 733
சீட்டிழுப்பு திகதி 25.07.2025
வெள்ளிக்கிழமை
14 34 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4587
சீட்டிழுப்பு திகதி 25.07.2025 தினம் வெள்ளிக்கிழமை
21 35 56 57 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,648,136.40


ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 21 15 25 29 38
சுப்பர் இலக்கம்
2051
25.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,283,535.40
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2701
சீட்டிழுப்பு திகதி: 2025.07.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,480,436.00
அட கோடிபதி ADA KOTIPATHI
05 42 50 70 G
ரூ.100,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)

“ நாங்கள் உங்களோடு”

ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021

A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571

A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 535 7803

(4897)

## ICT வகுப்புக்கள்

Personal Classes

O/L & A/L

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கும் இடங்கள்

யாழ்.நகர், கிளிநொச்சி

075 828 2528

(1362)

## காணி விற்பனைக்கு

- நவக்கிரியில் 17 பரப்புத் தோட்டக் காணி வெட்டுக் கிணறுடன் விற்பனைக்கு
- 2 பரப்பு வீடு கட்டுவதற்கு உரிய காணியும் உண்டு (நிலாவரை சந்தியில் இருந்து 600m)

077 082 1010

(4889)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3950/- |
| 11-16 Kg | 2690/- |
| 21-27 Kg | 2490/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/- | Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

(C-3506)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 241/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 369/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2750/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 195/= | Max 3Kg |
| 1Kg கீரிச்சம்பா | - 258/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 899/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| 01 அங்கர் யோகட் | - 45/= | ~~70/=~~ |

Max 02 — 400g Anchor 1100/=



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(1364)

## உடனடி வேலைவாய்ப்பு

- விற்பனை உதவியாளர் தேவை - ஆண்கள்/ பெண்கள்

யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கி வரும் குழந்தைகளுக்கான பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் ஆண்கள்/ பெண்கள் வேலைக்குத் தேவை.

- யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இடம் : Kids Galary (pvt) Ltd

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

077 469 6695/ 076 166 1986

(C-3505)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378, 076 097 3127

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகர்ப் பகுதி இராசாவின் தோட்ட வீதியில் இரண்டு குடும்பங்கள் வசிக்கத்தக்க மாடி வீடு வாடகைக்கு உண்டு. (தரகர்கள் தேவையில்லை)

074 132 0957

(4887)

## வேலைவாய்ப்பு


வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள வேலையாட்கள், உணவு பரிமாறுபவர்கள் (waiter) தேவை.

076 830 3931

(4856)

# மரண அறிவித்தல்

மலர்வு
20 - 07 - 1957



உதிர்வு
23 - 07 - 2025

## சோமசுந்தரம் சோதிநாதன்

கேணியடி, திருநெல்வேலி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது Mesched, Germany ஐ வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சோதிநாதன் அவர்கள் கடந்த (23.07.2025) புதன்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சங்கிலிக் காரச்சோமு) - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரை - அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தி அவர்களின் ஆருயிர்க் கணவரும் தக்சன், ஆகித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், சண்முகலிங்கம் மற்றும் குணபாலசிங்கம், சிதம்பரநாதன் (இலங்கை), துரைராஜசிங்கம் (இலங்கை), இராஜேஸ்வரி (கனடா), சண்முகநாதன் (இலங்கை), மோகனதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாவித்திரிதேவி, காலஞ்சென்ற குலேந்திரராஜா, தெய்வேந்திரராஜா, சாதனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (31.07.2025) வியாழக்கிழமை ஜேர்மனியில் இடம்பெறவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜபாதை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரன்
[illegible]

(C-3507)

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

இந்தியன் செலக்‌ஷனின்

ஆடி மாத அதிரடித் தள்ளுபடி

இன்று முதல் ஆகஸ்ட் 05ஆம் திகதி வரை

| | | |
|---|---|---|
| சாறி | ~~2000/=~~ | 1000/= |
| சாறி | ~~2500/=~~ | 1500/= |
| சாறி | ~~5000/=~~ | 3500/= |
| பொப் | ~~2500/=~~ | 1000/= |
| பொப் | ~~3000/=~~ | 1500/= |
| பொப் | ~~2500/=~~ | 1500/= |
| சல்வார் துணி | ~~1800/=~~ | 1400/= |
| லெஹங்கா | ~~11000/=~~ | 6000/= |
| லெஹங்கா | ~~12000/=~~ | 7000/= |
| லெஹங்கா | ~~12500/=~~ | 8000/= |
| லெஹங்கா | ~~20000/=~~ | 10000/= |
| சல்வார் | ~~10000/=~~ | 5000/= |
| சல்வார் | ~~16000/=~~ | 9000/= |



கல்யாணி கொட்டன் சாறி 3000/= மட்டுமே

மற்றும் தாராளமான ஆடைத் தெரிவுகள்

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

காலம் : இன்று 26.07.2025 முதல் 05.08.2025 வரை

(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)

(1363)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.